# முன்னறி தெய்வம்



கவிநாயகர்

வி. கந்தவனம்

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை

கனடா

உ

# முன்னறி தெய்வம்

கவிநாயகர்
வி. கந்தவனம்

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை
கனடா

நூல்: முன்னறி தெய்வம்

ஆசிரியர்: வி. கந்தவனம்

அமைப்பு: மா. கனகசபாபதி

அச்சடிப்பு: விவேகா அச்சகம்

வெளியீடு: ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை, கனடா

முதற் பதிப்பு: சித்திரை 2013

உரிமை: வாரணன் கந்தவனம்

Title: Munnari Theivam

Language: Tamil

Author: V. Kandavanam

Design: M. Kanagasabapathy

Printing: Viveka Press

Published by: The Hindu Religious Society of Ontario, Canada

First Edition: April 2013

Copyright: Varanan Kandavanam

# பதிப்புரை

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை 1994ஆம் ஆண்டு தொடக்கம் நூல் வெளியீட்டுப் பணியில் ஈடுபட்டு வருகின்றது. ஆன்மிகம், சமய வரலாறு, தமிழ் இலக்கியம் ஆகிய துறைகள் அளாவிய 48 நூல்களை இதுவரை பேரவை வெளியிட்டுள்ளது.

இவற்றுள் சைவதுரந்தரர் கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களின் நூல்கள் 15 என்பது குறிப்பிடத் தக்கது. அவர் இந்து சமயப் பேரவைத் தலைவருமாவர். பேரவை வெளியிட்ட அவரது நூல்களில் நாவலர் பெருமானின் சைவ வினாவிடையைத் தழுவி எழுதிய புதிய சைவ வினாவிடை மூன்று பதிப்புகளைக் கண்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. அவ்விதமே அவரது பிற நூல்களும் பலராலும் விரும்பி வாங்கப்பெற்றன.

கவிநாயகராற் பாடப்பெற்று பேரவை வெளியிட்ட கவிதை இலக்கியங்களும் பலவாகும். அவை தங்கம்மா நான்மணி மாலை, நல்லூர் நாற்பது(மறுபதிப்பு), விநாய விருத்தம், விநாயக வெண்பா, நால்வர் நால்மணி மாலை என்பனவாகும். இவ்வகையான சிற்றிலக்கிய வரிசையில் பல சிறப்பு அம்சங்கள் நிறைந்த **முன்னறி தெய்வம்** என்னும் இந்நூலை வெளியிடுவதிற் பேரவை பெருமையடைகின்றது.

அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் என்பது ஔவைப்பிராட்டியாரது வாக்கு. தமது பெற்ற அன்னையாரைத் சிறுவயதில் இழந்த கவிநாயகர் அவர்கள் உள்ளத்தில் அக்காலம் முதலாகத் தேங்கியிருந்த தாய்ப்பாசத்தை இந்நூல்மூலம் வெளிப்படுத்துகின்றார். அத்துடன் பிள்ளைகள் வயது முதிர்ந்த பெற்றோரைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று கூறித் தமிழ்ச் சமுதாயத்தின் உணர்வுகளையும் தட்டி எழுப்புகின்றார். பெரியாரைப் பேணாது தாழ்வுற்றுப் போகும் எமது சமுதாயத்தைத் தூக்கி நிறுத்தும் பாங்கிலே இவர் பாடல்கள் அமைகின்றன.

பெற்றவரைப் பேணாதார் பிள்ளைகளே அல்லர் என்றும் தாய்தந்தையர் வாழச் சத்திரங்கள் தேடுவது சேய்களுக்குச் சற்றும் சிறப்பில்லை என்றும் பெற்றவர் மூப்புற்ற காலத்தில் அவரைக்

காப்பாற்றுவது மக்கள் கடமை என்றும் கவிநாயகர் கூறுபவை தமிழ்ச் சமுதாயம் கூர்ந்து கவனிக்க வேண்டியவை.

இந்நூலுக்கு அரியதோர் அணிந்துரையை கலாநிதி திருமதி பார்வதி கந்தசாமி அவர்கள் வழங்கியிருக்கின்றார். மிகவும் பிரபலியமான மங்கையர் திலகம் அவர். சிறந்த அறிஞரும் சமூக சீர்திருத்தவாதியும் பண்பாளருமாகிய அவருக்கும் பேரவையின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

தாய்ப்பாசத்துடன் பெற்றவரைப் பேணவேண்டிய கடமையையும் வலியுறுத்தும் இந்நூலை வெளியிடுவதில் இந்து சமயப் பேரவை பெருமகிழ்ச்சியடைகிறது.

இந்நூலை வடிவமைப்புச் செய்த திரு. மா. கனகசபாபதி அவர்களுக்கும் அட்டைப் படத்தை அழகுற அமைத்துத் தந்த சாமந்தி இல்லத்தார்க்கும் நூலை அச்சடித்த விவேகா அச்சகத் தினருக்கும் பேரவையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவ. முத்துலிங்கம்
பொதுச் செயலாளர்
நூல் வெளியீட்டுப் பொறுப்பாளர்
ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை

## சுவை வெண்பா

காவிய மென்பேன் கவிஞர் படைத்தநல்
பாவியம் நாற்பதுவும் பாரினிலே - ஓவியமாய்
தூரிகைச் சொற்றமிழில் தோய்ந்ததைத் தீட்டினார்
யாரிடம் சொல்வேன் அழகு.

கவியுலகு போற்றும் கவிநா யகரின்
கவலைமிகு காவியத்தைக் கற்றேன் - புவியோர்க்கு
சொல்லி முதலிற் சுவைவெண்பா தான்பாட
நல்ல தவம்செய்தேன் நான்.

ஈன்றவளைப் போல இயற்கையை நேசிக்கும்
ஆன்றோன்தன் உள்ளத்(து) அலையுணர்வு - தோன்ற
நயமாகச் சொன்னார் நுணாவில் நலன்கள்
உயர்வாக அன்னைநல் லூர்.

கண்ணகி சீதை கதைகளைக் கேட்துண்டு
மண்ணதில் வாழ்ந்து மறைந்தாலும் - எண்ணத்தில்
தாலாட்டும் அன்னை நினைவுகளைத் தண்டமிழில்
நூலாக்கித் தந்தார் நுகர்ந்து.

பெற்றவள் கற்றவள் பெற்றியை மற்றவர்
முற்றிலும் காண முடியாது - வற்றிடா
அன்பினால் தோழியாய் தாதியாய் ஆனவள்
தன்னலங் காக்கா தவள்.

இறைவனே அன்னையாய் இவ்வுலகு வந்தான்
நிறைவாக நல்லாட்சி நேர - உறவாய்
தமிழ்த்தாயும் தத்தெடுத் தாளோ கவியால்
தமிழூர் விளைந்திடத் தான்.

இழப்பின் வலிகள் இருந்தே இதய
எழுத்தில் வடித்தார் எமையே - அழவைத்துப்
பார்க்கும் கவிஞரின் பாத்திரம் என்சொல்வேன்
நீர்க்குளமாம் கற்பவரின் நெஞ்சு.

வாழ்க்கைப் பயணம் விதியினால் மாறிடினும்
தாழ்வுற்றுச் சிந்தை தளராது - ஆக்கமுறு
பாதையினைச் செப்பனிட்டுப் பார்த்திட்ட அன்னையவள்
காதையினை ஆக்கினார் காண்.

அன்பின் இலக்கணமாம் அன்னை நினைவுகளை
இன்ப இலக்கியமாய் என்றென்றும் - மன்பதையில்
நிற்க இயற்றினார் நேர்த்திக் கவிதைகளைக்
கற்பாரும் நிற்பார் கசிந்து.

இலக்கணம் ஐந்தும் இணைந்துவெண் பாவில்
துலக்கமுற நின்று சுவைகள் - பலப்பலவாய்க்
கூட்டிக் குருவின் குறைவில் கற்பனையும்
காட்டும் கவித்துவத்தைக் காண்.

தாயின் பெருமைகள் சான்றோன் பகர்கையில்
வாய்மை உணர்வொன்றை வைத்துள்ளார் - நீயென்னுள்
யானுன்னுள் என்றே அழகாகக் கூறினார்
வானுற வாழுமிந்த வாக்கு.

முன்னறி தெய்வங்கள் முன்னின்று வாழ்த்திடுவர்
அன்னவரைப் பாடிய அருங்குருவும் - தன்னூலைப்
பாடப் பணித்ததும் பாக்கியமே பாவரசர்
நீடுழி வாழ்க நிலத்து.

- முரளீதரன்
கனடா கவிஞர் கழகம்

கலாநிதி திருமதி பார்வதி கந்தசாமி அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

கவிநாயகர் கந்தவனம் நாற்பது வெண்பாக்களால் தனது தாயின்மேல் இருந்த காதலைக் காவியமாகக் கண்டிருக்கிறார். பச்சைக் குழந்தையாக அப்பனை இழந்து அநாதரவாக நின்று அன்னையின் ஆதரவைப் பெற்று 'தாய்' என்ற காராம்பசுவை இழந்த துன்பியல் நிறைந்த கவிஞரின் வாழ்வு பண்டைய கிரேக்க துன்பியல் நாடகமேதை ஈஸ்கிலஸ் இயற்றிய பழைய மரபுநடை நாடகம் தந்த உணர்வுகளை என்மனதிலே எழ வைத்துள்ளது கவிதை நாற்பது.

'முன்னறி தெய்வம்'. வாழ்வு ஓட்டத்தில் நெருடல்களை, மனிதமனம் சுமக்கும் நிதர்சனத்தை இப் படையல் பளிச்சென்று எமக்குக்காட்டி நிற்கின்றது. மகனாய், மருமகனாய், அனாதையாய், கணவனாய், தந்தையாய், சமூக சீர்திருத்தவாதியாய் எனப் பலகோணங்களிலிருந்து கவிநாயகரை இச்சிறு நூலில் காணக் கூடியதாக இருக்கின்றது. இதனை வாசித்தபோது கவிநாயகர் மீது பரிதாபமும், பாசமும் பரிவும் கலந்த உணர்வை ஏற்படுத்தியது.

பெண்மையின் இயல்புகளை அன்னை என்ற அளப்பபரிய பாத்திரத்தினூடாக வெண்பாக்கள் நாற்பதில் காவியம் ஒன்றைப் படைத்திருக்கின்றார் கவிநாயகர். முன்னறி தெய்வமாக அன்னையையும் பிதாவையும் ஒளவையார் காட்டியிருந்தார். கவிஞர் ஒளவை என்ற அறிவுக்கு ஒருபடி முன்னே சென்று தாயாரின் கருப்பையுள் சிசுவாக இருந்த தனது உயிரையும் உடலையும் தொப்பூள் கொடியூடாக அன்னையுடன் பிணைத்து வாஞ்சையுடன் பகிர்ந்து கொண்ட கதைகள், இரகசியங்களை நினைவுகூருகிறார்.

முற்றா வயதில் முதல்வனடி முத்தமிட்ட
பெற்றோர் நினைவுகளை பேதையுற்ற – பற்றால்
விருந்தாக வைக்க விரும்புகிறேன்

எனப் பெற்றோருக்குக் காணிக்கையாக முன்னறிதெய்வம் என்ற படைப்பு ஆக்கப் பட்டுள்ளது. கிரேக்க நாட்டுப் பாணர்கள் தங்கள்

பாடல்களை முன்னுரைப் பாடல்களோடு தொடங்கியதாகப் பேராசிரியர் கைலாசபதி தமிழ்ப் பாணர்களை ஒப்பிடும்போது கூறியுள்ளார். இதனைக் கவிநாயர் கையாண்டுள்ளமை மரபுகளைப் பேணுவதில் கவிநாயகருக்கு இருக்கும் பற்றைப் பறைசாற்றுவதாக உள்ளது.

கவிநாயகரைச் சில சமயங்களில் சித்தர்களின் வாரிசு என நான் கருதுவதும் உண்டு. மெய்யியல்களுக்கு மேன்மை தரும் பாடல்களைச் சித்தர்கள் பாடியிருக்கிறார்கள். கட்டற்ற வாழ்க்கை வாழ்ந்த சித்தர்கள் எல்லையற்ற நோக்கைக் கொண்டவர்களாக வாழ்ந்தனர். எதனையும் எடுத்தெறிந்து 'மாங்காய்ப்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்குத் தேங்காய்ப் பால் ஏதுக்கடி' எனச் சிலேடையாகவும் பாடுபவரகள். செந்தமிழ்ச் செழுமைகொண்ட பாடல்களை அமைத்த சித்தர்கள் போலவே கவிநாயகரும் சொல்லிலும், பேச்சிலும், எழுத்திலும் யாருக்கும் அஞ்சாது துணிவுடன் செயற்படுபவர். தான் நினைத்ததை வெளிப்படையாகவே சொல்லிவிடுவார்.

'தாய்' மார்க்சிம் கோர்க்கி எழுதிய ஒரு சிறந்த கலைப்பொக்கிசம். தாய்மை என்பது தாய்மையடையாத எவராலும் அறிந்துகொள்ள முடியதாத அபூர்வ உணர்வுகளை உள்ளிட்டது. தாயின் சக்தியை வெளிப்படுத்த நாடுகள், களபூமிகள், நதிகள், அண்டங்கள் ஆகிய எல்லாவற்றிலும் மாதாவை தரிசிக்கும் பண்பை உலகெங்கும் காணமுடிகிறது.

அன்னையின் ஒளிக்கு அவளை முழுநிலவு நாளன்று வளம் கொழிக்கும் வசந்தகால சித்திரா பௌர்ணமியில் விழா எடுக்கும் வழக்கத்தைத் தமிழர் கடைப்பிடித்து வந்துள்ளனர். இந்த நன்நாளில் தனது அன்னைக்கான விரதத்தை அனுட்டிக்க மறந்ததால் தன்னுடைய ஆற்றாமையை அன்னைக்கான படைப்பான 'முன்னறி தெய்வமாக' ஆக்கியுள்ளார் கவிஞர்,

தன்வாழ்க்கையில் கண்ட அன்பு உள்ளங்கள், அன்புசொரிந்து வளர்த்து ஆளாக்கியவர்கள், நட்புப்பூண்டவர்கள், புத்திரச் செல்வங்கள், மனைக்கொண்டாள் எல்லோரையும் விட மேலான பிணைப்பை தொப்புள் கொடிப்பிணைப்புடன் பிணைத்துள்ளார் என்பதை முன்னறி தெய்வம் என்ற படைப்பு

உணர்த்தி நிற்கின்றது. 'என் அன்னை இறக்கும்போது எனக்கு ஐந்து வயதுதான் ஆனால் எனக்கு என் அன்னைபற்றிய பல நினைவுகள் பதிவுகளாகிவிட்டன. எங்கள் தந்தை திடீரென இறந்ததும் எங்கள் அன்னை நோயுற்றவராக இருந்தும் எங்களை வளர்க்கப் பட்ட கஷ்டங்களை நினைத்துப்பார்க்க மனம் புல்லரிக்கிறது. திடீரென வந்தநோயினால் வைத்தியசாலைக்கு அவசரமாகக் கொண்டுசென்று அனுமதிக்கப்பட்ட அன்னையை நாம் சென்று தரிசிப்பதற்காக மூத்த அண்ணனுடன் போய்க்கொண்டிருக்கும்போது அவரைப் பிணமாக வழியில் சந்தித்தது என் மனக்கண்ணில் தோன்றி லேசிலே இறுங்காத என்னுடைய கண்களை இன்றும் கலக்குகின்றது. நோயான பிள்ளையாக அன்று நான் இருக்க என்னுடைய பூரண நிலவாக இருந்து என்மேல் பாசம் கொட்டிய அந்தத் தெய்வத்தை நான் எப்படி மறப்பேன்' என்று கண்கள் பனிக்க குரல் தழுதழுக்கக் கூறினார் கவிஞர்.

பெண்களின் பொருளாதார விடுதலையைப் பச்சைப் பாலகனாக தந்தையை இழந்த கவிநாயகர் நன்கு உணர்ந்திருக்கிறார் என்பதை தன்னுடைய தாய் பம்பரமாகச் சுழன்று வேலைகள் செய்வது பற்றிக் கூறும்போது அறிய முடிந்தது. வரலாற்றில் பெண்களின் பங்குபற்றிய விடயங்க்ளை கல்விக்கண்கள் மூலம் சிந்தனைக்கு உட்படுத்தி ந. சி. கந்தையாபிள்ளை 'பெண்கள் போராட்டம்' என்ற நூல் ஒன்றை 1948இல் முன்னறி தெய்வங்களுக்கான சிறுகாணிக்கையாக யாத்திருந்தார். அவருடைய முன்னுரையில் -

'பொருளாதார விடுதலையே பெண்களின் விடுதலையாகும். பெண்கள் தமது ஊணுக்கும், உடைக்கும், மற்றும் வேண்டியவை களுக்கும் ஆடவரின் அல்லது கணவரின் கையை எதிர்பாராத நிலைமை உண்டாகும்போது பெண்களுக்கு விடுதலை தானே உண்டாகின்றது' எனக் கூறினார்.

கவிஞர் தனது தாயை இழப்புக்காக ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கும் செய்வதறியாத தாயாகக் காணவிரும்பவில்லை. திடீரென வீறுகொண்டு எழும் வேங்கையான தாயைத் தனக்கு உவமை இல்லாதவராகக் காண்பதை இரு வெண்பாக்களில்

காட்டுவது கவிஞர் பெண்கள்பற்றிய போராட்ட உணர்வை வரவேற்பதை உணர்த்துவதுடன் கவிஞர் வீரநிலைப் பாடல்களையும் படித்த அனுபவ முத்திரையையும் காணமுடிகிறது.

அள்ளி அணைப்பார் அழுவார் அதன்பின்னர்
தள்ளிக் கிடந்துறங்கும் தம்பியையும் – கிள்ளி
அழுதேந்தி ஐயகோ ஐயகோ என்பார்
புழுவரித்து வீழ்ந்தபழம் போல்.

ஆர்வுடனே பெற்ற அருஞ்செல்வப் பிள்ளைகளைச்
சீருடனே ஆளாக்குஞ் சிந்தையுடன் – பேரிடரைப்
போக்கி எழுந்தார் புதுக்கோலம் பூண்டுழைத்தே
ஆக்கம் பெறத்தொடங்கி னார்.

இவ்விரு பாடல்களும் எவ்வாறு கொடுந்துயர் காரணமாக வந்த நோயால் (Post Traumatic Stress Disorder) பீடிக்கப்பட்டு அழுந்துவோர் மன உளைச்சலிலிருந்து விடுபடலாம் என்ற உளமருத்துவத்தையும் காட்டுகின்றன.

கவிஞர் எதற்கும் கிறுங்காது நிற்பவர் என்பதைப் பலமேடைகளில் கண்டிருக்கின்றேன். இந்த ஆளுமையை அவர் தன் தாயிடமிருந்து கற்றிருக்கின்றார் என்பதை அவர் அன்னை அமெரிக்கன் மிசன் கல்லூரியில் படித்தபோது கல்லூரிக்கு மூடுவிழா வைத்த சம்பவத்தை 'மாறு சமயமென மாறாது தன்வீடு நீறோடு வந்தார் நிமிர்ந்து' என எழுதியதிலிருந்து அனுமானிக்க முடிகிறது. அநீதிக்குத் தலை வணங்காத போக்கு கவிஞரிடம் நிறைவாகக் காணலாம்.

கவிஞர் கையாண்ட சொல்லாளுமைகள், உவமைகள் கவிஞரின் உணர்வுடன் ஒன்றிய நுணாவில் கிராமியத்துடன் ஒன்றித்து இருப்பதைக் காட்டுகின்றது. புழுவரித்து வீழ்ந்த மரம் போல, அம்புபட்ட மான் போல போன்ற உவமைகள், வெண்பாவிற்கு ஏற்ற சீர் பயன்படுத்தியமை, மண் பற்றிய பிணைப்பைக் காட்டும்

'ஆறில்லாப் போதும் அழகுபா ழாகாத
பேறுள்ள மண்ணிலெனைப் பெற்றெடுத்த' எனவும்
'மருதநிலம் வீற்றிருக்கும் மாங்குயில்கள் பாடும்

நிருதிதிசை நெய்தலுந்தான் நீளும் – முரிமுல்லை
ஆங்காங் கழகுக் குழைக்காட்(டு) அரசோச்சும்
பாங்கார்நு ணாவில்' எனவும்

புனைந்த வெண்பாக்கள் கவிஞரின் உள்ளுணர்வுடன் ஒருங் கிணைந்த புனைவுத் திறனை வெளிக்காட்டும் உதாரணங்களாகக் கொள்ளலாம்.

கடந்த சில தசாப்தங்களை நோக்கும்போது தமிழர் பண்பாட்டு ஒழுகலாறுகளில் பல துறைகளிலும் மாற்றம் ஏற்படுவதை அவதானிக்கலாம். உலகமயமாதல், அகதிகளின் அதிகரிப்பு, வாழிட நிலைப்பின்மை, புலப்பெயர்வு, மேற்கத்தியமயமாதல், தொழில்மயமாதல், ஓரினமாதல் (assimilation), நகரமயமாதல், நவீனமயமாதல் முதலியவற்றால் பண்பாட்டு மாற்றம் பாரிய அளவில் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதனால் பாதிக்கப்படுவோரில் வயோதிபர்கள் தொகை கீழைத் தேசங்களில் அதிகமாகின்றது. இதனைக் கண்ணுற்ற கவிஞர் ஆற்றாமையால்,

பெற்றவரைப் பேணாதார் பிள்ளைகளே அல்லரவர்
கற்றதுவும் வீணே கடல்கடந்து – பெற்றபெரும்
செல்வம் பதவிபுகழ் செல்லா துலகத்தில்
அல்லல் அவர்வாழ்க்கை யாம்.

தாய்தந்தை தாழ்வுற்றுச் சத்திரங்கள் தேடுவது
சேய்களுக்குச் சற்றும் சிறப்பில்லை – தாய்தந்தை
மூப்புற்ற காலத்தில் முன்னுரிமை தந்தவரைக்
காப்பாற்றல் மக்கள் கடன்.

எனப் பெற்றோரைப் பேணாதோர் மீது கடுஞ் சினம் கொள்வதும் அவர்க்கான அறிவுரைகள் கூறுவதும் இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்தேதான்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது இந்நூல் தமிழுக்கு ஒரு மறுவரவு. நாற்பது வெண்பாக்களால் தமிழர் மரபில் பண்படுத்தப்பட்ட ஒழுகலாறுகளை அன்னை அன்பினூடாகக் காட்டி நிற்கிறார் கவிஞர் கந்தவனம்.

வாழ்வளித்தோரை வாயார வாழ்த்தும் அதே சமயம் அன்னைக்கு நிகர் யார்? என்ற வினாவையும் எல்லார் மனதிலும் எழுப்பி அம்மாவின் உள் அவரும் அவருள்ளே அம்மாவுமாக நிற்கவைத்து அன்னையை நாளிலும் பொழுதிலும் பூசித்து நிற்பது அம்மாவின் இழப்பை இன்னமும் ஈடுசெய்யக் கூடிய நிலைக்கு யாரும் அவருக்கு இருக்கமுடியாது என்பதைக் காட்டுகின்றது.

கவிநாயகர் தமது புனைவுத் திறத்தாலும் தமது வினை நுட்பத்தாலும் காலத்தால் அழியாத வெண்பாக்களைக் 'கார் நாற்பது', 'களவழி நாற்பது' என்ற வரிசையில் வாழ வைக்கும் முயற்சியில் வீறுநடை போட்டுத் தமிழன்னைக்குத் தொடர்ந்து தொண்டுசெய்து வளம் சேர்க்க வாழ்த்துகிறேன்.

01 அக்டோபர் 2012 பார்வதி கந்தசாமி

உ

# முன்னறி தெய்வம்

## கடவுள் வணக்கம்

மங்கை இடப்பாகர் மைந்தர் விநாயகரே
துங்க அடிகள் தொழுதடியேன் - பங்கமிலா
வெண்பாவால் தாய்தந்தை மேன்மை விளம்பிடவே
கண்பார்வை செய்வீர் கனிந்து.

## அவையடக்கம்

முற்றா வயதில் முதல்வனடி முத்தமிட்ட
பெற்றோர் நினைவுகளைப் பேதையுற்ற - பற்றால்
விருந்தாக வைக்க விரும்புகின்றேன் குற்றம்
இருந்தால் பொறுக்க இசைந்து.

## நூல்

ஐஞ்சு கரமுடையார் ஆளும்நு ணாவில்மண்
கொஞ்சும் கிளிகள் குதுகலிக்கும் - விஞ்சுமெழில்
தாமரைப்பூத் தாயருக்குச் சாமரைகள் வீசிவரும்
பாமணக்குந் தென்றல் பதி. (1)

மருதநிலம் வீற்றிருக்கும் மாங்குயில்கள் பாடும்
நிருதிதிசை நெய்தலுந்தான் நீளும் - முரிமுல்லை
ஆங்காங் கழகுக் குழைக்காட்(டு) அரசோச்சும்
பாங்கார்நு ணாவிற் பதி. (2)

அறிஞர் நிறைந்தபதி அன்பொழுக்கம் ஆன்ற
பொறுமை புலனடக்கம் போற்றிச் - சிறிதேனும்
துன்பில் துவளாத தொல்குடிகள் வாழுகின்ற
பண்பிற் பழுத்த பதி. (3)

ஆறில்லாப் போதும் அழகுபா ழாகாத
பேறுள்ள மண்ணிலெனைப் பெற்றெடுத்த - ஏறுநடை
தந்தை விநாயகரும் தாயார்சின் னம்மாவும்
சிந்தையிலே தேங்கியுளார் சேர்ந்து. (4)

உடுவை அமெரிக்கன் ஓங்கு 'மிசன்' பள்ளி
விடுதி யிருந்தன்னை மெத்தப் - படிக்கையிலே
மாறு சமயமென மாறாது தன்வீடு
நீறோடு வந்தார் நிமிர்ந்து. (5)

வந்த பதினா றகவை மகள்தன்னைத்
தந்தை தனவந்தர் தம்பியையா - சிந்திந்தே
ஏற்ற வரன்தேடி இல்லறத்தில் சேர்ப்பித்தார்
போற்ற உறவினரும் பூத்து. (6)

தாயார்நு ணாவில்தான் தந்தையார் மட்டுவிலூர்
தூயார்நல் இல்லறத்தால் தோற்றுவித்த - சேய்கள்
மணியாம் பசுபதிமார்க் கண்டுகந் தவனம்
கணபதிப் பிள்ளையவர் காண். (7)

முத்தமுடன் பாலூட்டி முற்றத்தில் விட்டிருக்கச்
சித்திரங்கள் செய்த சிறுவயதில் - பத்திசெய்த
அம்மன் வருத்தம் அழவைக்க நேர்ந்தென்னை
அம்மனுக்கே விற்றுவிட்டா ராம். (8)

நோயுள்ள பிள்ளையென நோகவிடா தேந்தியெனைத்
தாயணைத்துத் தாங்கித் தனியன்பைப் - பாயவிட்டுச்
சத்துள்ள சாப்பாடு தந்து வளர்த்தவளென்
பத்திக் குரிய பரை. (9)

காலை குளிப்பாட்டிக் கட்டித் தழுவிநல்ல
சேலை உடுத்தித் திருநீறும் - கோலமுறப்
பூசி அனுப்புவார் போற்றிவீ டேழேகி
யாசித் தரிசிபெற யான். (10)

எங்கும்யான் தண்டி எடுத்த அரிசியினைப்
பங்குனிநல் திங்களன்று பத்தியுடன் - பொங்கி
நுணாவில் குளத்தாட்கு நோன்பாய்ப் படைத்தல்
குணாமகள் செய்வார் குறித்து. (11)

அப்பத்தைச் சுட்டன்னை அப்பர் தமக்களிக்க
அப்பர் மடிவைத்(து) அருத்தியது - இப்பொழுதும்
நன்றாய் நினைவில் நடமாடி நன்கவரோ(டு)
ஒன்றாய் இருத்தும் உளத்து. (12)

என்னகவை மூன்றாக எந்தை சிவபெருமான்
தன்னடிகள் தான்சேரத் தாயாரும் - மென்னுடலில்
அம்புபட்ட மான்போல நாளும் அலமந்து
வெம்பியழு வாரே விழுந்து. (13)

அள்ளி அணைப்பார் அழுவார் அதன்பின்னர்
தள்ளிக் கிடந்துறங்கும் தம்பியையும் - கிள்ளி
அழுதேந்தி ஐயகோ ஐயகோ என்பார்
புழுவரித்து வீழ்ந்தபழம் போல். (14)

ஆர்வுடனே பெற்ற அருஞ்செல்வப் பிள்ளைகளைச்
சீருடனே ஆளாக்குஞ் சிந்தையுடன் - பேரிடரைப்
போக்கி எழுந்தார் புதுக்கோலம் பூண்டுழைத்தே
ஆக்கம் பெறத்தொடங்கி னார். (15)

அருகில் அருள்வீர பத்திரரின் ஆண்டுத்
திருவிழாக் காலத்தில் தெய்வம் - உருவந்தென்
அன்னைதனில் நின்றாடும் அற்புதமார் காட்சியினும்
என்னுள்ளே நின்றாடு மே. (16)

வீரபத்தி ரர்கோயில் கோலங் கரையருளும்
வீரகத்தி யார்நுணா விற்குளத்துப் - பேரமைந்த
கண்ணகை அம்மனுடன் கந்த வனக்கடவைத்
தண்ணருள் பெற்றவளென் தாய். (17)

கந்த வனக்கடவைக் காதலால் எந்தனையும்
கந்தவன மென்றாளாம் கற்பரசி - சந்ததமும்
பூசுகின்ற நீறதுபோல் உள்ளும் புனிதமகள்
பாசமின்றும் காக்கும் பரிந்து. (18)

பாசத் தமையன்தம் பாப்பிள்ளை தங்கைமார்
ஆசிரியர் பொன்னம்மா அம்மணியார் - மாசில்
இளையபிள்ளை என்பார் உறவுகளை என்றும்
தளரவிடார் அன்புள்ள தாய். (19)

தொழில்பெற்(று) அண்ணர்மார் தூரவூர் செல்ல
அழகன் இளவலும்யா னுந்தான் - விழிநோக்கும்
அன்னையுடன் வீட்டில் அவரன்பில் தோய்ந்திருந்து
சொன்னபடி செய்திடுவோம் தொண்டு. (20)

அக்காவென் றெல்லோரும் அன்னை தனையழைக்க
எக்காலும் நாமும் இதமாக - அக்கா
எனவழைக்கத் தாயார் எதுவுமே பேசார்
தனக்குவமை இல்லா தவர். (21)

உற்றபிற ஊரார் உறவினர்கள் யாவரையும்
பற்றுடனே போற்றும் பழக்கத்தை - பெற்றவளின்
பண்பாடு காட்டும் படிப்பிக்கும் மற்றவற்றைக்
கண்பா(டு) அதுவே கதி. (22)

கடமை உணர்வும் கடுங்கட்டுப் பாடும்
மடமை வயதினிலே மாதா - நடைமுறையால்
அன்றறிந்து கொண்டேன் அவரின் அறிவுரைகள்
இன்றுமெனைக் காக்கும் இருந்து. (23)

ஓயா தியங்கி உறங்கா துழைக்கின்ற
தாயார் சுறுசுறுப்பும் தன்மானம் - சாயாத
பெண்மைக் குணமும் பெருமிதமும் கண்டதுயான்
உண்மை உயர்ந்தேன் உணர்ந்து. (24)

அன்புக் கரசி அடக்கக் குணவரசி
பண்புக் கரசி பதிவிரதை - முன்பு
முடித்த வினைபோலும் மூச்செறிந்தே ஓர்நாள்
துடித்து விழுந்தாள் துவண்டு. (25)

ஆமா றறியாதே யாமழுத சத்தத்தில்
மாமியுடன் மாமாவும் வந்தார்கள் - மாமாபின்
வாகனத்தில் தங்கையினை வைத்தியசா லைக்கேற்றி
வேகமுடன் சென்றாராம் வெந்து. (26)

அன்று முதலாக அம்மாபோல் மாமியெமை
நன்றாகப் பார்த்து நயம்செய்தார் - என்றாலும்
ஊற்றுப்போல் தாயார் உணர்வூற நாமழுவோம்
ஆற்றுவார் மாமி அணைத்து. (27)

அன்னை எமைப்பார்க்க ஆவலுற்றார் என்றொருநாள்
முன்னாலே வந்துநின்றார் மூத்தண்ணர் - சொன்னவுடன்
மேனி கழுவிநல்ல மேலாடை யிட்டுப்பின்
தானும் புறப்பட்டார் சார்ந்து. (28)

தாகத்தா யன்பைத் தழுவும் மகிழ்ச்சியுடன்
வாகனத்தில் செல்லும் மகிழ்ச்சியதும் - நாகசுரம்
வாசிக்க ஐயகோ வாயிலுக்கு வந்ததே
வீசிக் களைத்த விதி. (29)

மாய்ந்ததுவே தாங்கி வளர்த்த கொழுகொம்பு
சாய்ந்தனனே நண்பகலில் தாமனுந்தான் - ஓய்ந்தன்னை
வீழ்ந்து பிணமாக வீட்டுக்கு வந்திறங்கச்
சூழ்ந்ததே துன்பச் சுழல். (30)

மூன்று வயதினிலே தந்தை முதற்போக
ஈன்றவளும் ஐந்தில் எனைவிட்டாள் - சான்ற
தவஞ்செய்யேன் ஏன்பிறந்தேன் தாரணியில் எல்லாம்
சிவன்செய்யும் கூத்தின் திறம். (31)

அன்பான தாயும் அறிவான தந்தையுமாய்ப்
பண்பான மாமன்தம் பாப்பிள்ளை - தன்பால்
கடவுள் பணித்த கடமையென வெண்ணி
வடிவாய் வளர்த்தார் மகிழ்ந்து. (32)

ஏமாற்றி நான்செய்த எல்லாக் குழப்படிக்கும்
மாமா விடமேச்சு வாங்கிநின்ற - மாமிக்கும்
நன்றியோ நன்றி நடமாடும் தெய்வம்போல்
ஒன்றினார் வந்தென் னுடன். (33)

இளவயதில் என்னைப்போல் தாயை இழந்தோர்
அளவறியா அன்பின் அருமைக் - குளிர்மை
அறியா திருந்திடலாம் ஆனாலும் தாயின்
நிறையன்புக் கென்மாமி நேர். (34)

தேடற் கரிய திரவியமாம் என்றாலும்
ஈடில் இதயத் திறைதாயே - நாடுமுயர்
அன்புக்கும் ஆன்ற அறிவுக்கும் வையத்துப்
பண்புக்கும் தாயே பதம். (35)

முன்னறியும் தெய்வமென்ற மூதாட்டி கூற்றுக்குள்
மன்னுபொருள் என்னவெனில் மாவேதம் - சொன்னவர்தம்
பேரியல்பைப் பெற்றவர்தம் பிள்ளைகளில் காட்டுவதாம்
பேரியல்புக்(கு) அன்பாம் பெயர். (36)

தாயோர் மலைமகளாம் தாங்கும் புவிமகளாம்
தூய கலைமகளாம் துன்பாற்றப் - பாயுமுயர்
அன்பார் அலைமகளாம் ஆன குலமகளாம்
என்பார் அவர்மக்க ளே. (37)

பெற்றவரைப் பேணாதார் பிள்ளைகளே அல்லரவர்
கற்றதுவும் வீணே கடல்கடந்து - பெற்றபெரும்
செல்வம் பதவிபுகழ் செல்லா துலகத்தில்
அல்லல் அவர்வாழ்க்கை யாம். (38)

தாய்தந்தை தாம்வாழச் சத்திரங்கள் தேடுவது
சேய்களுக்குச் சற்றும் சிறப்பில்லை - தாய்தந்தை
மூப்புற்ற காலத்தில் முன்னுரிமை தந்தவரைக்
காப்பாற்றல் மக்கள் கடன். (39)

என்தெய்வத் தாயே எனைவிட்டு நீயேகி
உன்தெய்வத் தோடுற்(று) உறைந்தாலும் - மன்பதையில்
யானுன்னை யாண்டும் மறந்திலேன் ஏனென்றால்
யானுன்னுள் நீயென்னுள் ஆம். (40)

## நிறைவு

நாற்பதுக்குள் சென்றவளை நாற்பதுக்குள் நானடக்கிப்
பாற்பசுவாம் தாய்ப்பாசப் பாலுண்டேன் - நாற்புறமும்
உள்ளவரே பெற்றவளை உள்ளத்தில் வைத்தன்பு
வெள்ளத்தால் சீராட்டு வீர்.

தாயோ டிருக்கத் தவஞ்செய்தல் வேண்டுமிந்த
நாயேன் அதுசெய்தே னல்லேனே - ஆயுளுடன்
தாயிருக்கக் காணும் தவமுடையீர் தாயான
கோயிலினைப் பேணீர் குளிர்ந்து.

முன்னறி தெய்வம் முற்றிற்று.

## அருஞ்சொற் பொருள் விளக்கம்

கடவுள் வணக்கம்: துங்க - தூய, பெருமை மிக்க. பங்கமிலா - குற்றம் இல்லாத.

1. விஞ்சும் எழில் - மிகுந்த அழகு. தாமரைப்பூத் தாயர் - செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகளும் வெண்டாமரையில் வீற்றிருக்கும் கலைமகளும்.
2. நிருதிதிசை - தென்மேற்குத் திசை. நிருதி - குபேரன். குபேரனின் திசை தென்மேற்கு. முரிமுல்லை - துண்டு துண்டாகக் காணப்படும் முல்லை. முல்லை - காடும் காடுசார்ந்த இடமும். பாங்கார் - பாங்கு ஆர் - இயல்பு உடைய.
3. துன்பில் துவளாத - துன்பத்தில் வாடாத.
4. ஏறுநடை - பெருமிதமான ஒழுக்கம்.
5. உடுவை - உடுப்பிட்டி. ஓங்குமிசன்: ஓங்கு - பிரபலியமான. மிசன் - Mission – தூதுப் பணி.
9. பரை - பார்வதி, சிவசக்தி.

10. வீ டேழேகி - வீடு ஏழு ஏகி. யாசித்தல் - பிச்சை எடுத்தல்.
11. குணாமகள் - குணமகள்.
13. அகவை - வயது. எந்தை - எனது தந்தை. அலமந்து - வருந்தி.
14. அழுதேந்தி - அழுது ஏந்தி.
15. பேரிடர்: பேர் இடர் - பெருந் துன்பம்.
18. பரிந்து - இரங்கி.
20. அழகன் இளவல் - தம்பி கணபதிப்பிள்ளை.
22. கண்பாடு - கண் குறிப்பு.
23. மடமை வயது - அறியாப் பருவம்.
24. கண்டதுயான் உண்மை - (அத்தகைய இயல்புகளை யான் கண்டது உண்மையாகும்.
25. பதிவிரதை - கற்பரசி.
26. ஆமா றறியாதே: ஆமாறு அறியாதே - நடந்தது என்ன என்று தெரியாது.
28. மூத்தண்ணர் - மூத்த அண்ணர் - வி. பசுபதி.
30. தாமன் - சூரியன். சுழல் - சுழல் காற்று, சஞ்சலம்.
31. தாரணியில் - உலகத்தில்.
33. மாமா விடமேச்சு: மாமாவிடம் ஏச்சு. மாமா தம்பாப்பிள்ளை. மாமி சின்னம்மா.
35. இதயத் திறை - இதயத்தில் இருக்கும் கடவுள்.
36. மூதாட்டி - அவ்வைப் பிராட்டியார். மாவேதம் - சிறந்த வேதங்கள். சொன்னவர் - சிவபெருமான்.
40 யாண்டும் - எப்பொழுதும்.

---------------------------

கவிநாயகர் தமது புனைவுத் திறத்தாலும் தமது வினை நுட்பத்தாலும் காலத்தால் அழியாத வெண்பாக்களைக் 'கார் நாற்பது', 'களவழி நாற்பது' என்ற வரிசையில் வாழ வைக்கும் முயற்சியில் வீறுநடை போட்டுத் தமிழன்னைக்குத் தொடர்ந்து தொண்டுசெய்து வளம் சேர்க்க வாழ்த்துகிறேன்.

- கலாநிதி திருமதி பார்வதி கந்தசாமி